THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 22nd August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU UAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Working hours in schools and Government offices.

* 1311 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have referred any proposal to change the working hours in offices and schools to District Collectors for their remarks?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of altering the working hours in Government offices is under consideration of the Government and Collectors have been consulted on this. In regard to change of working hours in schools the Collectors were not consulted.

Working hours in Government offices

* **1312** *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் அலுவலகங்களின் வேலை நேரத்தை மாற்றி அமைக்க கலெக்டர்களின் அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டனவா ?

(இ) அப்படியானால் , அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ( ) Yes, Sir.

(இ) The replies received from the Collectors are still under examination and the Government have not yet taken a decision.

SRI N. K. PALANISAMI : ஸார், இப்போது இருக்கக்கூடிய ஆபீஸ் நேரத்தை மாற்றக்கூடாது என்று என்.ஜி.ஓ. சங்கம் சர்க்காருக்கு தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறார்களா ? அதன் காரணமாக இந்த நடவடிக்கை கைவிடப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் இது பற்றி முடிவெடுக்கப்படவில்லை. எந்த முறையையும் யாரும் முதலிலே மாற்றுவதற்கு விரும்புவதில்லை. ஆனால் நாம் வாழ்க்கையில் மட்டும் மேலும் மேலும் செளகரியங்கள் வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் அதற்குத் தகுந்த முறையிலே உழைக்க வேண்டுமென்று நினைப்பதில்லை. ஆகவே அரசியல் கட்சிகளும் இதை உணர்ந்து, நல்ல மாறுதல்களுக்கு தங்கள் ஆதரவைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

SRI S. M. ANNAMALAI : ஸார், முன்பு அமைச்சர் அவர்கள் இங்கிலாந்துக்கு சென்றுவிட்டு வந்து, அந்த அனுபவத்தை யொட்டி இந்த நேரத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அமெரிக்

[22nd August 1961

காவுக்கும், பிற நாடுகளுக்கும் சென்று வந்த அனுபவத்தையொட்டி, இந்த காலை நேரத்தில் அலுவலகங்களை ஏற்படுத்துவதைக் குறித்து தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும், அதையொட்டி என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா முன்னேற்ற நாடுகளிலும் காலையில் வெகு சீக்கிரமாகவேதான் ஆரம்பிக்கிறார்கள். எல்லா நாடுகளிலும் அநேகமாக காலை 8 மணிக்குத் தான் தங்கள் வேலைகளைத் தொடங்குகிறார்கள். பல இடங்களில் 30, 40 மைல்களுக்கு அப்பால் இருந்துகூட காலை 8 மணிக்கு அலுவலகத்திற்கு வருவதற்காக காலை 5½ அல்லது 6 மணிக்குப் புறப்பட்டு வந்து விடுகிறார்கள். அப்படி வந்து 8 மணிக்கே அலுவல்களைத் தொடங்கிவிடுகிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், புதிய திட்டத்தில் இருக்கக் கூடியபடி, அதன் அடிப்படையில் வேலைகளைத் துவங்கினால் நாள் ஒன்றுக்கு ஒரு நபர் எத்தனை மணி நேரம் அதிகப்படியாக வேலை செய்யவேண்டி ஏற்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதிகப்படியான நேரத்திற்கு வேலை செய்ய வேண்டுமென்பதே கருத்தல்ல. காலை நேரத்திலே ஆரம்பித்து வேலை செய்தால், மிகவும் குளிர்ச்சியான வேளையில் நல்லபடி வேலை செய்யலாம். அதை விட்டுவிட்டு நேரம் கழித்து வேலைகளைத் துவங்கினால், தூங்கிக்கொண்டுதான் வேலை செய்ய வேண்டியிருக்கும் என்பது தான் இப்போதுள்ள கருத்து.

SRI T. S. RAMASWAMI : With regard to the school hours, may I know whether the attention of the Government has been drawn to the fact that in the Kanyakumari district the District Educational Officer has ordered the changing of school hours from 10 a.m. to 4 p.m. to 9 a.m. to 5-30 p.m.? May I know whether the Government have authorized him to change the school hours in the manner he has done and, if not, what the attitude of the Government is in regard to this matter?

DEPUTY SPEAKER : How does this question arise from the main question?

SRI T. S. RAMASWAMI : The question relates to schools also, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to have notice, Sir.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that even though the Government offices are stipulated to start working from 10-30 a.m. the full complement of office staff does not trun up at 10–30 a.m. in many of the offices? If so, will the Government take steps to enforce that regulation at least strictly before thinking of changing the hours of working?

THE HON. SRI C. SUBRAMANIAM : In the initial stages there was some slackness in attendance and they were just getting adjusted. My impression is that the officers and other employees are now attending Government offices by 10-30 a.m.

22nd August 1961]

SRI A. A. RASHEED : What are the new working hours that are under consideration by the Government? Will the Government consider changing the working hours from 8 a.m. to 2 p.m. at least during the summer season?

THE HON. SRI C. SUBRAMANIAM : The whole matter is under consideration. Therefore, I am unable to give an immediate answer. As pointed out by Sri N. K. Palanisami, there is opposition from the N.G.O's Association in regard to this matter. In these matters, we will have to carry the persons concerned along with us. There is no use of making a change which is likely to be opposed by anybody, whether reasonably or unreasonably. We should argue and reason with them and carry them with us.

SRI M. KALYANASUNDARAM : ஸார், அமைச்சர் அவர்கள் அதிக நேரம் வேலை வாங்க வேண்டுமென்பது சர்க்காரின் நோக்கமல்ல, காலை நேரத்தில் ரொம்பவும் குளிர்ச்சியாக வேலை செய்ய வேண்டுமென்பது தான் நோக்கமென்று சொன்னார்கள். இப்போது காலை 10-30 மணிக்கு ஆரம்பம் என்று குறிப்பிடப்பட்டும் ஜில்லா கலெக்டர் ஆபீசிலும், மற்றும் தாலூகா ஆபீஸ்களிலும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரையில் வேலை செய்து வருவது தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது உண்மையானால் மிகவும் சந்தோஷப்பட வேண்டியதே. ஆனால் இதைப்போல் ஒரு சிலர் வேலை செய்யலாம். இப்படி மனசாட்சிக்கு ஒத்து வேலை செய்வது வரவேற்க வேண்டியதே. ஆனால் சாதாரணமாக வேலை செய்யக்கூடியவர்களுக்குத் தான் இப்போது செய்யப்படும் ஏற்பாடுகள்.

SRI A. VEDARATHNAM : அரசாங்க அலுவலகங்களிலே இந்த நேரத்தை மாற்றுவதில் சிக்கல்கள் இருந்தபோதிலும், பள்ளிக்கூட நேரத்தை மாற்றுவதில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றித்தான் ஆலோசனை செய்யப்பட்டு, இப்போது நகரங்களிலே இருக்கக்கூடிய அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் காலை 9 மணிக்கு ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

Formation of road (Srirangampatti-Mathangudi road)

*1313 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the stage at which the acquisition of lands for the formation of a road from Srirangampatti village, Thennangudi vattam to Mathangudi to connect Pudukkottai-Thanjavur road, Kulathur and Alangudi taluks, stands?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of initiating Land Acquisition Proceedings does not arise in the case as the road has already been completed without acquisition of any lands.

SRI V. ARUNACHALA THEVAR : எந்த வருஷம் இந்தப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் ? இவ்வளவு காலதாமதம் ஆனதற்குக் காரணம், சர்க்காரிலே நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலே உடனடியாக நடவடிக்கை